# உன்னத தேவனவர் நம்மை

உன்னத தேவனவர் நம்மை
படைத்தவர் ஆள்பவர் ஆண்டவர் அவரே
உன்னத தேவனவர் -2

**1**
காலையும் மாலையும் கடவுளின் மேன்மை
பாடுதல் நல்லதுவே - 2
கனிவுடன் பாடலில் வீ..ணையும்
மீட்டிடப் பாடுதல் நல்லதுவே (உன்னத ....)

**2**
ஏனெனில் ஆண்டவரே உ....ம் செயல்களால்
மகிழ்வுட்டுகின்றீர் உம் திருப்படைப்புகளால்
நான் களிப்புறுகின்...றேன் - ஆண்டவரே
உம் செயல்கள் எவ்வளவோ மகத்தானவை
உம் நினைவுகள் எவ்வளவு ஆழ்ந்தவை ( உன்னத .... )

**3**
ஆண்டவர் மாபெரும் படைப்புக்கள்; அனைத்தும்
அறிவிலி அறிவதில்லை -2
பாவிகள் செழிப்புடன் வாழ்ந்திருந்தாலும்
பாவங்கள் அவர்களை வீடுவதில்லை ( உன்னத .... )